# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார் வணிக மாத இதழ்

Volume: 13 Issue : 10 JANUARY 2025 Tamil & English Monthly Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE



பிப்ரவரி 28 தாய்லாந்து

மார்ச் 10 சிங்கப்பூர் மலேஷியா

மார்ச் 18 அந்தமான்

மார்ச் 25 வியட்நாம் கம்போடியா

ஏப்ரல் 25 ஹாங்காங்

ஏப்ரல் 5 காஷ்மீர்

ஏப்ரல் 15 துபாய்

மே 17 சிம்லா மணாலி

மே 23 ஐரோப்

மே 23 சிங்கப்பூர் மலேஷியா

BOOK NOW 99 43 03 1237

VH VEDHAVALLI HOLIDAYS

வேதவல்லி ஹாலிடேஸ்

82/235, காமராஜர் சாலை, மதுரை




# 18th SOURASHTRA CHAMBER OF COMMERCE

SCC invites you all with your family members to participate on

# ANNIVERSARY CELEBRATION

**Date: 26.01.2025 (Sunday)**

**Time: 06.01 PM**

**Venue: Kamatchi Arangam A/C**
(Opp. Sou. Chamber)

To




SOWBHAGYAAS


வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536



METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

# மெட்ரோ ஷூ மார்ட்





16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343

TEXMO®
Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer :

## Sri Balameenakshi Aqua Pumps

124, West Masi Street, Near Murugan Temple, Madurai - 625 001. Cell : 93616 25696

**H.O. : Madurai Pipes**

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 4378524, Cell : 94437 95317

B.O. : 32A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014. Cell : 99946 57349

AQUATEX®
Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems




KARPAGAM GROUP OF COMPANIES
SINCE 1985

# Karpagam

## Auto Group of Companies

**Dealers in Automobile Spare Parts**

53, 56, 67, Tamil Sangam Road, Madurai - 625 001. Tamilnadu
Ph. 0452-4375875, 2342267, 2340067 | email : stores@karpagamauto.com

# தலைவர் அறிக்கை

அஸ்கிதெ ங்கோ மொன்னு பொறெ

## நமஸ்கார்...

K.K. திநேஷ், தலைவர்

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் 18ம் ஆண்டு விழா வருகிற 26.01.2025 - ஞாயிறு மாலை 6 மணி அளவில் நம் அலுவலகத்திற்கு எதிரே உள்ள ஸ்ரீகாமாட்சி அரங்கில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட இருக்கிறது. இந்த விழாவில் தாங்கள் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

18 வருடங்களாக நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சிறப்பாக இயங்கி வருவதற்கு அங்கத்தினர்களாகிய தங்களின் பேராதரவே காரணம். அதோடு, சேம்பர் முன்னாள் தலைவர்கள், அப்போதைய நிர்வாகிகள் மற்றும் செயற்குழுவில் இணைந்து சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு சேவை செய்த அனைவரையும் இந்த தருணத்தில் பெருமிதத்துடன் நினைத்துப் பார்க்கிறேன்.

அவோ! மிளோ!! ஹொடோ!!! என்கிற நமது தாரக மந்திரத்திற்கு உயிரூட்டும் விதமாக நமது அமைப்பு செயல்பட்டு இன்றளவு தொடர்ந்து தொண்டாற்றி வருவது பெருமையே.

சென்ற மாதம், நாம் ஏற்பாடு செய்திருந்த, வருமான வரி தொடர்பான விழிப்புணர்வு கூட்டத்தில், அங்கத்தினர்கள் பல்வேறு கோரிக்கைகளை அதிகாரிகளிடம் தெரிவித்தனர். அதிகாரிகளும் அதனை ஏற்று பரிசீலிப்பதாக கூறினார்கள். அதே போல, வணிக வாடகை கட்டடங்களுக்கு 18% ஜிஎஸ்டி வரி (ஆர்சிஎம் முறை)யை பரிசீலிக்க அரசுக்கு சேம்பர் கடிதமும் அனுப்பியிருந்தது.

இந்நிலையில், வரி பாக்கி உள்ளவர்கள் சந்திக்கும் சில நடைமுறை சிக்கல்களை கருத்தில் கொண்டு விவாத் சே விஸ்வாஸ் திட்டத்தின் கீழ் 31.12.2024க்குள் கட்ட வேண்டிய வரி பாக்கியை 31.01.2025க்குள் கட்டலாம் என்ற கால நீட்டிப்பு அறிவிப்பை சமீபத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளதும். அதேபோல, வணிக வாடகை கட்டட வரி முறையை பரிசீலிக்க அனுப்பப்பட்ட கடிதத்தின் பலன், காம்போசிஷன் டீலர்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது என்று வெளியான அறிவிப்பும் மகிழ்ச்சியை அளிக்கிறது.

நமது சேம்பர் மூலமாக வைக்கப்படும் பல கோரிக்கைகள் அரசிடம் இருந்து கிடைக்கும் சாதகமான பலனால் நமது சேம்பருக்கு கௌரவம் என்றே கருதுகிறேன்.

இது போல, மதுரையில் ஜிஎஸ்டி குறைதீர்க்கும் கூட்டத்தில் நமது சேம்பருக்கு கிடைத்த அழைப்பினை ஏற்று GRO **திரு. N.S. பிரேம் குமார்** அவர்கள் கலந்து கொண்டார். கமிஷனர் அன்வர் அலி அவர்களிடம் குறைகளை கோரிக்கை மனுவாக அளித்தனர். அதன்விபரம் நாளிதழ்களிலும் வெளியானது, தாங்கள் அனைவரும் அறிந்ததே. நிச்சயம் அதற்கான தீர்வுகளும் அரசிடமிருந்து கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

அனைவருக்கும் 75வது குடியரசு தின நல்வாழ்த்துகள்.

நன்றி.

SOURASHTRA CHAMBER OF COMMERCE

## BOARD OF MEMBERS YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |
| K.K. Shankar | Member | 97881 62559 |
| K.K. Ramkumar | Member | 98421 40007 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. குமரேஷ் பாபு

**23.12.2024** – மதுரை விமான நிலைய அதிகாரி திரு. **பி. முத்து குமார்** அவர்களை சேம்பர் நிர்வாகிகள் நேரில் சந்தித்து விமான நிலைய விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டிற்கு மனு அளித்தனர்.

**29.12.2024** – ஸௌராஷ்ட்ர ஜிம் பவள விழா மற்றும் பெங்களூரு குஸோ அமைப்பின் ஆண்டு விழாவில் ஸௌராஷ்ட்ர சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**31.12.2024** – ஜிஎஸ்டி தொடர்பான குறைதீர்க்கும் கூட்டத்திற்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் சார்பாக ஜிஎஸ்டி ஆலோசகர் திரு. **N.S. பிரேம் குமார்** மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கமிஷனர் **திரு. அன்வர் அலி** அவர்களின் தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றது. சேம்பர் சார்பாக கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

**07.01.2025** – **G(f)ood Business** என்கிற தலைப்பிலான உணவு உற்பத்தித் தொழில்துறையினருக்கான சிறப்பு நிகழ்ச்சி சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. இதில், சிறப்பு விருந்தினராக அன்னபூரணி மிட்டாய் திரு. **அருள் சுஜனேஷ்** சிறப்பு விருந்தினராகவும், சத்யபாமா கேட்டரிங் திரு. **P.R. குபேந்திரன்** கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டு பேசினார்கள். சேம்பர் தலைவர் திரு. **K.K. தினேஷ்** அவர்கள் தலைமைத் தாங்கினார்.



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. விக்னேஷ் பாபு

சென்ற டிசம்பர் மாத லாப் ஸமாச்சார் இதழ், மாண்புமிகு தமிழ்நாடு வணிக வரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் **திரு. பி. மூர்த்தி** அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது பெருமையளிக்கிறது. இந்த சந்திப்பிற்கு உதவிய, மல்லிகை **திரு. பா. திலீபன் சக்கரவர்த்தி** அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு தொழிலை வெற்றிகரமாக நடத்தச் செல்ல, நிதி, தொழில்நுட்பம், மனித வளம் முக்கியமானதாகிறது. அதன்படி, சென்ற மாத இதழில் எனது அறிக்கையில் கூறியது போல, இந்த ஜனவரி மாதம் முதல், பணப்புழக்க அறிக்கை (Cash Flow) சம்பந்தமான தகவல்கள் வெளியாகிறது. சென்ற மாதம் முதல் மனித வள மேலாண்மை குறித்த தகவல் தொடர்ச்சியாக வெளியாகி வருவது குறிப்பிடத்தக்கது. தொழில்நுட்பத் தகவலையும் விரைவில் தொடராக வெளியீடு செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தவிர, நமது சேம்பர் செயல்பாடுகள் மற்றும் தொழில் குறித்த பல்வேறு தகவல்கள் இந்த மாத இதழில் வெளியிட்டுள்ளோம். இது அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

நன்றி

## குடியரசு தின விழா

காலை 08.30 மணி * ஸௌராஷ்ட்ர சேம்பர் ஹால் *(Mayflower Hall)*

**26.01.2025**

## 18ம் ஆண்டு விழா

மாலை 06.00 மணி * காமாட்சி அரங்கம் *(Opp. Sou. Chamber)*

**அனைவரும் வருக!!**

## திருக்குறள்

**ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை**
**ஊக்கார் அறிவுடை யார்**

**பொருள்:** தெரிந்தவர்களோடு ஆலோசிக்காமல் அவசரப்பட்டு எந்தக் காரியத்தையும் தொடங்கக் கூடாது. இலாபத்துக்கு ஆசைப்பட்டு உள்ள முதலை இழந்துவிடக்கூடிய காரியத்தை அறிவுடையவர்கள் ஆரம்பிக்க மாட்டார்கள்.

அதிகாரம் 47 — தெரிந்து செயல்வகை (செய்யப்புகும் காரியத்தைத் தெரிந்து செய்வது) — அரசியல்

**Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account**

Name : Sourashtra Chamber of Commerce
Bank : State Bank of India
Acct. No. : 30134805614
Branch : Madurai City
IFSC : SBIN0011544




*Best Compliments from*

# BVK GROUP

Indus Finance Ltd
Indowind Energy Ltd
EverOn Power Ltd
BeKae Properties P Ltd
BVK Foundation

4th Floor (NW), Kothari Building, 114, M.G. Road, Nungambakkam, Chennai - 600 034.
No.603, Keshava - BKC, Mumbai - 400 051.

# காம்போசிஷன் திட்ட வணிகர்களுக்கு மட்டும் வாடகை தொகையில் ஜி.எஸ்.டி விலக்கு

விற்றுமுதலை 1.5 கோடி ரூபாய் கொண்டவர்கள், நிலையான திட்டத்தில் ஜிஎஸ்டி வரி செலுத்தலாம். இதற்கு காம்போசிஷன் ஸ்கீம் என்று பெயர். இவர்களுக்கு, வாடகையில் ஜிஎஸ்டி 18 சதவீதம் செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு, அக்., 10ம் தேதி முதல், வணிக நோக்கில் இயங்கும் கட்டட வாடகையில், 18 சதவீதம் ஜிஎஸ்டி வரி செலுத்த வேண்டுமென உத்தரவிட்டுள்ளது. தொழில் அமைப்புகள், வணிகர்கள், வரி விதிப்பில் இருந்து விலக்கு அளிக்க வேண்டுமென வலியுறுத்தி வருகின்றனர்.

கடந்த 21ம் தேதி நடந்த, 55வது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் ஆண்டுக்கு 1.5 கோடி ரூபாய் வரை வர்த்தகம் செய்யும் காம்பொசிஷன் திட்ட வணிகர்களுக்கு மட்டும், வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. முழுமையாக விலக்கு அளிக்கப்படவில்லை என, ஆடிட்டர்கள் தெளிவுபடுத்தி உள்ளனர்.

இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவன, திருப்பூர் கிளை தலைவர் ஆடிட்டர் செந்தில் குமார் கூறியதாவது, ஜிஎஸ்டி செலுத்துபவர்களில், காம்பொசிஷன் திட்டத்தில் ஒரு பிரிவினர் இருக்கின்றனர். அத்தகைய திட்டத்தில் ஜிஎஸ்டி செலுத்துபவர்களுக்கு மட்டும், வணிக பயன்பாட்டு கட்டட வாடகைக்கு, ஜிஎஸ்டி 18 சதவீதம் (ரிவர்ஸ் சார்ஜ் முறையில்) செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அத்தகைய வர்த்தகர்கள், சரக்கு அல்லது சேவை பெறும் போது செலுத்தும் ஜிஎஸ்டி வரியை உள்ளீட்டு வரியாக திரும்ப பெறுவதில்லை. ஜிஎஸ்டி வரி செலுத்தும் மற்ற வணிகர்கள், செலுத்தும் வாடகையில், 18 சதவீதம் வரி செலுத்த வேண்டும்; அதை, சட்டத்திற்கு உட்பட்டு உள்ளீட்டு வரியாக எடுத்துக் கொள்ளலாம். கட்டட உரிமையாளர்கள் ஜிஎஸ்டி பதிவு பெற்றவர்களாக இருந்தால், அவர்களுக்கு வாடகையில் ஏற்கனவே, 18 சதவீதம் வரி விதிக்கப்பட்டுள்ளது.

கட்டட உரிமையாளர், ஜிஎஸ்டி பதிவு செய்யாதவராக இருந்தால், கடை நடத்தும் வர்த்தகர்கள் அல்லது நிறுவனத்தினர், மாதந்தோறும் வாடகையில் 18 சதவீதம் அளவுக்கு ரிவர்ஸ் சார்ஜ் முறையில் ஜிஎஸ்டி செலுத்த வேண்டும் என்ற உத்தரவு நடைமுறையில் உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

திருப்பூர் வரி பயிற்சியாளர் கூட்டமைப்பு தலைவர் முத்துராமன் கூறியதாவது. ஜிஎஸ்டி கவுன்சிலில், வாடகை கட்டடத்தில் இயங்கும் கலவை திட்ட வணிகர்களுக்கு (காம்போசிஷன்) மட்டும் விலக்கு அளிக்கலாம் என பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

கலவை திட்ட வணிகரிடம் வாடகை பெறும் கட்டட உரிமையாளர் ஜிஎஸ்டி பதிவு பெறாதவராக இருந்தால் வாடகை வருவாயில் 18 சதவீதம் வரி செலுத்த வேண்டியதில்லை. மாறாக, ஜிஎஸ்டி பதிவு பெற்றவராக இருந்தால், கலவை திட்ட வணிகர் வாடகையுடன் 18 சதவீதம் வரியை சேர்த்தே செலுத்த வேண்டும். இத்தொகையை, பதிவு பெற்ற கட்டட உரிமையாளர்கள் அரசுக்கு செலுத்துவர். வாடகை கட்டடத்தில் இயங்கும் நிறுவனங்கள் செலுத்தும வாடகை தொகை மீதான, 18 சதவீத வரிவிதிப்பு தொடர்பான பிற விளக்கம் கொடுக்கப்படவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# அபராதம் இன்றி ஜன., 31 வரை வரி பாக்கியை செலுத்தலாம்

சென்ற 2024 டிசம்பர் மாதம் 5ம் தேதி நடைபெற்ற வருமான வரி விழிப்புணர்வு கூட்டத்தில் விவாத் சே விஸ்வாஸ், வெளிநாடு வாழ் இந்தியர்களின் வருமான வரி, அட்வான்ஸ் வரி போன்றவைகள் பற்றி நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அங்கத்தினர்கள் தாங்கள் சந்திக்கும் நடைமுறை பிரச்சனைகள் குறித்து கருத்து தெரிவித்தனர். கலந்து கொண்ட அதிகாரிகளும் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டனர்.

இந்நிலையில், கடந்த ஜன., 1ம் தேதி, **விவாத் சே விஸ்வாஸ்** திட்டத்தின் கீழ் வட்டி மற்றும் அபராதமின்றி வரி பாக்கியை செலுத்துவதற்கான காலக்கெடுவை ஜனவரி 31ம் தேதி வரை வருமான வரித்துறை நீட்டித்துள்ளது.

காலக்கெடுவுக்குள் வருமான கணக்கை தாக்கல் செய்யத் தவறிய, அதிக வரி பாக்கி வைத்துள்ளவர்களுக்கு வரி செலுத்த வாய்ப்பளிக்கும் திட்டத்தின் கெடு, மேலும் ஒரு மாதம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

விவாத் சே விஸ்வாஸ் திட்டத்தை, கடந்த பட்ஜெட்-ல் மத்திய அரசு அறிவித்தது. இது தற்போது நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள நேரடி வரி வழக்கு தகராறுகளை வட்டி அல்லது அபராதம் எதுவும் இன்றி தீர்க்க, வாழ்நாளில் ஒருமுறை வரி செலுத்தவோருக்கு வாய்ப்பளிக்கும் திட்டம் இது. இத்திட்டத்தின் கீழ், செலுத்த வேண்டிய தொகையை நிர்ணயம் செய்வதற்கான காலக்கெடுவை, மத்திய நேரடி வரிகள் வாரியம் 2024 டிசம்பர் 31ம் தேதியை கடைசி நாளாக அறிவித்திருந்த நிலையில், தற்போது நீட்டித்துள்ளது.



# உணவுத்துறைத் துறை வளர்ச்சிக்கு வழி




2025ம் ஆண்டின் முதல் தொழில் வர்த்தக கூட்டமாக உணவுத் துறை சார்ந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 07.01.2025 அன்று மாலை 6 மணிக்கு சேம்பர் வளாகத்தில், G(f)ood Business என்கிற தலைப்பில் இந்த கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக அன்னபூரணா மிட்டாய் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர், திரு. அருள் சுஜனேஷ் அவர்கள் கலந்து கொண்டார். கௌரவ விருந்தினராக சத்தியபாமா கேட்டரிங் நிறுவனத்தார் திரு.P.R. குபேந்திரன் அவர்கள் கலந்து கொண்டார்.

சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு ஒருங்கிணைப்பாளர் திரு. S.M. கார்த்தி குமரன் அவர்கள், பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்களின் உதவியுடன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

சிறப்பு அழைப்பாளர் திரு. V.S. விஷ்ணுவர்தன் அவர்கள் கௌரவ விருந்தினர் திரு. P.R. குபேந்திரன் அவர்களை அறிமுகம் செய்தார்.



திரு. P.R. குபேந்திரன் அவர்கள் உணவுதுறையில் ஏற்பட்ட தமது ஆரம்ப கால அனுபவத்தை முதலில் பகிர்ந்து கொண்டார். அதனடிப்படையில், உணவுத் துறை என்றில்லாமல், எந்தத் துறையானாலும், நிர்வாகத்தையும், பணியாளர்களையும் நிர்வகிக்கும் முறையிலேயே வெற்றி காண முடியும் என்று கூறினார்.

**Scan QR Code & Watch**

இத்துறையில் சிறிய அளவில் வியாபாரம் செய்பவர்கள் தமது நிறுவனத்தை சிறிதாக கருதக் கூடாது. துவக்கத்திலேயே ஒரு பிராண்டிங் உடன் செயல்பட்டால் உச்சத்தை அடையலாம் என்றார். அதற்கு பல உதாரணங்களைத் தெரிவித்தார். விற்பனை, மார்கெட்டிங் மற்றும் பிராண்டிங் இவைகளை ஒன்றாக பார்க்கக் கூடாது என்றார்.

தவிர, குடும்பம், வியாபாரம் மற்றும் சமூக பொறுப்பு இவற்றை எவ்வாறு ஒரு தொழில்முனைவோர் வகைப்படுத்திக் கையாள வேண்டும் என்று அழகான உதாரணங்களுடன் எடுத்துரைத்தார். மேலும் பல்வேறு தகவல்களை வழங்கி தமது உரையை நிறைவு செய்தார்.



அவரைத் தொடர்ந்து பேசிய திரு. அருள் சுஜனேஷ் அவர்கள், முதலில் நமது தொழிலில், தொழிலின் வகைபாடுகளை புரிந்து கொண்டு அதற்கான செயல்பாடுகளுக்கு சரியான தொழிலாளர்களை பணியமர்த்தி அவர்களை முறையான வழிகாட்டுதல்களுடன் கையாள்வதில் தான் நமது அன்றாட செயல்பாடுகள் எந்த ஒரு தங்குதடையின்றி சீராக இயங்கும் என்று கூறினார். இது உணவுத் துறையில் இருப்பவர்களுக்கு மிகவும் அவசியம் என்று கூறினார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட விருந்தினர்கள் இருவரையும் ஸௌ. சேம்பர் நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தது. அங்கத்தினர்களின் கேள்விகளுக்கு சிறப்பு விருந்தினர் அழகாக பதிலளித்தார். நிறைவாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

இந்த கூட்டத்திற்கு அறுசுவை விருந்தி ஏற்பாடு செய்த சிறப்பு அழைப்பாளர் திரு. T.R. சரவணன், துணைத் தலைவர் திரு. K.K. குபேந்திரன், முன்னாள் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா, செயற்குழு உறுப்பினர்கள் திரு. T.K. சிவநாத் பாபு, திரு. S.R. சுந்தர்நாத், திரு. K.B. சிவப்பிரகாஷ் பாபு மற்றும் சிறப்பு அழைப்பாளர் திரு. G.R. ஸ்ரீதரன் ஆகியோருக்கு சேம்பர் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.



# கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கான குறைந்தளவு ஊதியம்

ஆணை எண்: 45 / தேதி: நவம்பர் 13, 2024 - தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை பகுதி II - பிரிவு 2

| பணியாளர் வகைகள் | திங்கள் ஒன்றிற்கான குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் | | | |
|---|---|---|---|---|
| | மண்டலம் - A (1) மாநகராட்சிகள் & சிறப்புநிலை நகராட்சிகள் | மண்டலம் - B (2) நகராட்சிகள் | மண்டலம் - C (3) நகரியங்கள், பேரூராட்சிகள் பாளையங்கள் | மண்டலம் - D (4) A,B, & C ஆகிய பகுதிகள் நீங்கலாக அனைத்தும் |
| பொது வகையினர் | ரூ.காசு | ரூ.காசு | ரூ.காசு | ரூ.காசு |
| மேலாளர் | 7390.00 | 7328.00 | 7264.00 | 7214.00 |
| விற்பனை மேலாளர் | | | | |
| கள அலுவலர் | | | | |
| வளர்ச்சிப் பணி அலுவலர் | | | | |
| அலுவலகப் பொறுப்பாளர் | | | | |
| உதவி மேலாளர் | 6880.00 | 6815.00 | 6753.00 | 6691.00 |
| கணக்காளர் | | | | |
| மேற்பார்வையாளர் | | | | |
| விற்பனை அலுவலர் | | | | |
| கொள்முதல் செய்பவர் | | | | |
| பண்டகசாலைக் காப்பாளர் | | | | |
| முகவர் | | | | |
| விற்பனை மேம்பாட்டுப் பணியாளர்கள் | | | | |
| காசாளர் | 6829.00 | 6753.00 | 6680.00 | 6619.00 |
| எழுத்தர் | | | | |
| தட்டச்சர் மற்றும் எழுத்தர் | | | | |
| தட்டச்சர் | | | | |
| சுருக்கெழுத்தர் | | | | |
| விற்பனையாளர் | | | | |
| விற்பனை பிரிதிநிதி | | | | |
| ஏலம் விடுபவர் | | | | |
| வணிகர் | | | | |
| பட்டி(Bill) தயாரிப்பவர் | | | | |
| பட்டித் தொகை வசூலிப்பவர் | 6767.00 | 6691.00 | 6619.00 | 6553.00 |
| பதிவு செய்யும் எழுத்தர் | | | | |
| பட்டி எழுத்தர் | | | | |
| கிடங்குக் காப்பாளர் | | | | |
| உதவி விற்பனையாளர் | | | | |
| கிடங்குப் பொறுப்பாளர் | | | | |
| உதவிக் கணக்காளர் | | | | |
| வரவேற்பாளர் | | | | |
| கம்பியர் | | | | |
| சரிபார்ப்பு எழுத்தர் | | | | |
| பாதுகாப்புப் பணியாளர் | | | | |
| எடை போடுபவர் | | | | |
| ஓட்டுநர் | | | | |
| ஏவலாள் | 6691.00 | 6619.00 | 6541.00 | 6470.00 |
| காவலாள் | | | | |
| கடை உதவியாள் | | | | |
| துணையாள் | | | | |
| சிப்பம் கட்டுபவர் | | | | |
| உதவியாள் | | | | |
| பொருள்களை வழங்குபவர் | | | | |
| செய்தியாள் | | | | |
| மின்தூக்கி இயக்குபவர் | | | | |
| கடைச் சிப்பந்தி | | | | |
| தண்ணீர் கொடுப்பவர் | | | | |
| பெருக்குபவர் | | | | |
| தோட்டக்காரர் | | | | |
| துப்புரவுப் பணியாளர் | | | | |

தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

- L.V. Jothiprakash, Cell: 98422 64144, Advocate, Labour Law Management & Consultant

# GST REGISTRATION *Checklist*

## For Individuals:

- Photograph
- Aadhaar Card
- PAN Card
- Email ID
- Mobile Number

## For Partnership Firms:

### Firm Documents:

- Partnership Deed
- PAN Card of Firm
- Phone Number
- Email ID
- Authorized Signatory Details

### Partners' Documents:

- Photograph of each partner
- Aadhaar Card of each partner
- PAN Card of each partner
- Email ID & Mobile number of each partner

## For Companies and LLPs:

### Company/LLP Documents:

- Certificate of Incorporation
- PAN Card of Company / LLP
- Phone Number
- Email ID

### Directors/Designated Partners(DP) Documents:

- Photograph of each Director/DP
- Aadhaar Card of each Director/DP
- PAN Card of each Director/DP
- Email ID & Mobile number of each Director/DP

## Proof of Principal Place of Businss (Common for All Categories):

### For Owned Premises:

- Latest Property Tax Receipt, or
- Municipal Khata copy, or
- Copy of Electricity Bill

### For Other Premises (Eg., Shared Premises)

- Consent Letter
- Document supporting ownership of the premises
- Municipal Khata copy, or
- Electricity Bill copy

### For Rented or Leased Premises

- Valid Rent / Lease Agreement
- Document supporting ownership of the premises of the lessor
- Latest Property Tax Receipt, or
- Municipal Khata copy, or
- Copy of Electricity Bill

## Important Notes:

- **Name and Address Consistency:** Ensure that the name and address on the Municipal khata copy or Electricity Bill copy match the Rental Agreement / Consent Letter.
- **PAN and Aadhaar Linking:** Ensure that the PAN and Aadhaar are linked.
- **Previous Registrations:** If any previous GST registration was taken and subsequently cancelled, include a copy of the GSTR-10 Final Return




விழித்து எழுந்தவுடன் கிடைப்பதில்லை வெற்றி ! விழுந்து எழுந்தவுடன் கிடைப்பதே வெற்றி !!

ஸ்ரீ விஜயலெட்சுமி ஸ்கிரீன்

விஜயலெட்சுமி DTP & ஸ்கிரீன்

91506-00904, 99940-18805, 78128-19162

கதிர்வேல் நகர் 1 வது தெரு, 51/51, பாலு கொத்தனார் தெரு, மீனாட்சி நகர், வில்லாபுரம், மதுரை-12.

SINCE-1993 01-07-1993 31 Years 2023 SvlS

வெள்ளி விழா கண்ட நிறுவனம்

அனைத்தும் சிறந்த முறையில் செய்து தரப்படும்

தினசரி & கட்டிங் மாத காலண்டர்

12 DAYS DELIVERY மல்டிகலர் ஸ்டிக்கர்

தமிழ் டைரி ஆங்கில டைரி

30 DAYS DELIVERY கோல்டு ஸ்டிக்கர்

20 DAYS DELIVERY ஜூட் பேக் & தாம்பூல பை

பார்கோட் ஸ்டிக்கர் 5 to 10 DAYS DELIVERY

விபூதி கவர் 7 DAYS DELIVERY

சாமி படம் வுட்லேமினேசன்

ஸ்கூல் லேபிள்





நட்பை விட ! நம்பிக்கையை விட !! நாணயமே சிறந்தது !!!

Cell : 98421-18873,98428-18873

R.R. பாலகுமார்

R.R. குபேந்திரன்

R.R. பிரேம்குமார்

e.mail : svlsmadurai@gmail.com

# ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் சென்ற மாத சிறப்பு சந்திப்புகள்



லாப் ஸமாச்சார் வெளியீடு
நாள்: 20.12.2024

சேம்பர்-ன் 2024 டிசம்பர் மாத லாப் ஸமாச்சார் வணிக இதழ் மாண்புமிகு தமிழக அரசின் பத்திரம் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் **திரு. பி. மூர்த்தி** அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. இதில் சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்த சந்திப்பிற்கு உதவிய சேம்பர் சிறப்பு அழைப்பாளர் மற்றும் ஆயுட்கால உறுப்பினர் மல்லிகை திரு. திலீபன் சக்கரவர்த்திக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.


விமான நிலைய விரிவாக்க பணிகள்
நாள்: 23.12.2024

மதுரை மாநகரின் தொழில் வளர்ச்சியை & உட்கட்டமைப்பைக் கருத்தில் கொண்டு, மதுரை விமான நிலைய மேம்பட்டு பணிகள் துரிதப்படுத்துவதற்கு, மதுரை விமான நிலைய அதிகாரி **திரு. முத்துகுமார்** அவர்களை சேம்பர் நிர்வாகிகள் நேரில் சந்தித்து மனு அளித்தனர். மனுவில், விமான நிலையம், சரக்கு முனையம், வெளிநாட்டு விமானங்கள் வருவதற்கு, விமான நிலைய வசதிகளை மேம்படுத்துவது போன்ற பல்வேறு கோரிக்கைகளை அளிக்கப்பட்டன



ஜிஎஸ்டி குறைதீர்க்கும் கூட்டம்
நாள்: 31.12.2024

மத்திய சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பான குறைதீர்க்கும் கூட்டத்தில் வணிகர்கள், வணிக அமைப்புகள் தங்கள் குறைகளை தெரிவிக்கலாம் என்ற அழைப்பினை ஏற்று, நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் சார்பாக ஜிஎஸ்டி ஆலோசகர் திரு. N.S. **பிரேம் குமார்** மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கமிஷனர் **திரு. அன்வர் அலி** அவர்களின் தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றது. சேம்பர் சார்பாக கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

## ஜி.எஸ்.டி., அதிகாரியிடம் சவுராஷ்டிரா வர்த்தகர்கள் மனு

**மதுரை, ஜன.1–** மதுரை வணிகவரித் துறையில் ஜி.எஸ்.டி., குறைதீர் கூட்டம் வருவாய் அதிகாரி அன்வர் அலி முன்னிலையில் நடந்தது. இதில் சவுராஷ்டிரா சமூகத்தின் பல்வேறு சங்கத்தினரும் கோரிக்கைகளை மனுவாக அளித்தனர். அவற்றை ஜி.எஸ்.டி.கவுன்சிலுக்கு பரிந்துரைப்பதாக அவர் உறுதியளித்தார்.

சவுராஷ்டிரா சேம்பர் ஆப் காமர்ஸ் பொதுச் செயலாளர் ஏ.பி.குமரேஷ் பாபு மற்றும் நிர்வாகிகள் அளித்த மனு:

ஜி.எஸ்.டி., உச்சவரம்பு சேவைக்கு ரூ.40 லட்சம், வணிகத்திற்கு ரூ.80 லட்சமாகவும் உயர்த்த வேண்டும். வியாபாரிகளுக்கு நோட்டீஸ் கொடுக்கும் காலக்கெடு 5 ஆண்டுகள் வரை என்பதை 18 மாதத்திற்குள் கொடுக்க வலியுறுத்தினோம். உள்ளீடு வரி எடுப்பதற்கு காலஅவகாசம் 18 மாதம் மட்டுமே உள்ளன. 6 மாதங்களுக்கு ஒருமுறை தான் ஜி.எஸ்.டி., திருத்தம் செய்ய வேண்டும். அடிக்கடி செய்வதால் நடைமுறை சிக்கலுக்கும், புரிதலுக்கும் சிரமமாக உள்ளது.

வாடகை கட்டுமானங்களுக்கு உள்ளீட்டு வரி எடுத்துக் கொள்ளும் விதமாக சட்ட திருத்தம் செய்ய வேண்டும். ஜி.எஸ்.டி., ரிட்டர்னில் தங்களுடைய விளக்கங்களை கூறுவதற்கு தனியாக 'காலம்' (பகுதி) ஏற்படுத்த வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

–தினமலர் / 01.01.2024

**வாடகை மீதான வரி மத்திய அரசுக்கு நன்றி**

சென்ற மாதம் வணிக கட்டடங்களுக்கான 18% (ஆர்சிஎம் முறை) ஜிஎஸ்டி வரியை ரத்து செய்ய அரசுக்கு சேம்பர் சார்பாக அனுப்பப்பட்ட கோரிக்கைக்கு, சமீபத்தில் நடந்த ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில், காம்பொஷிசன் டீலர்களுக்கு மட்டும் வரி விலக்கு அளிக்கப்படும் என்கிற அறிவிப்பு மகிழ்ச்சி அளிக்கிறது.


**Sowndarya Traders**

*Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary*

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

# முடியரசை முடித்துவைத்த குடியரசு

– வீரஜா

மன்னர் ஆட்சி காலத்தில் பரம்பரை பரம்பரையாக அவர்களின் வாரிசுகளே பதவி வகித்த வழக்கம், பழக்கத்தில் இருந்தது. வாரிசு இல்லாத அல்லது வேறு அசாதாரண சூழ்நிலைகளில் தான் அதில் சிறிது மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆனால் அதன்பிறகு, அத்தகையவரின் வாரிசுகளே மீண்டும் அரசாட்சி செய்து வந்தது வரலாறு.

பிரதிநிதித்துவம் வாயிலாக மக்களாட்சியை அறிமுகப்படுத்தி, முன்னுதாரணமாக திகழ்ந்து, பொற்கால ஆட்சி அளித்த ராஜராஜ சோழன் மற்றும் புரட்சியின் வழியாக ஆட்சிக்கு வந்த சத்ரபதி சிவாஜியும் இதில் விதிவிலக்கல்ல. அவர்களின் வாரிசுகளே ஆட்சியில் தொடர்ந்தார்கள். இதனை குறை என்று பறைசாற்றவில்லை. அன்றிருந்த அரசியல் முறை அப்படி!!!

படையெடுப்பின் மூலம் பாரதத்திற்குள் நுழைந்த முகலாயர்களின் ஆட்சிகளும் அவ்வாறே அமைந்தன.

ஆங்கிலேயேர்களின் ஆதிக்கத்தில் அடாவடித்தனங்கள் மூலமாக அரசாட்சியை தங்களுக்கு சாதகமாக மாற்றிக்கொண்டனர். ஆனாலும் அதிலும் அவர்களின் சுயநலபோக்கு இருந்தது என்பது உலகறிந்த ரகசியம். தங்களுக்கு அடிபணியும் அரசர்களை ஆட்சிசெய்ய அனுமதித்தனர். ஆற்காட் நவாப், எட்டப்பன், தொண்டைமான் ஆகியோர் உதாரணங்கள். அப்படி அல்லாதவர்களை மிதித்தனர். கட்டபொம்மன், மருது பாண்டியர்கள், வேலு நாச்சியார் போன்றோர் சான்றுகள்.

சத்திய வழியில் மகாத்மாவும், சண்டை ஒன்றே சாத்தியம் என்ற வழியில் நேதாஜியும் போராடினர். இதனிடையே, திலகர் மற்றும் வ.உ.சி பொருளாதார அடிப்படையிலும், தாகூர், பாரதி போன்றோர் எழுச்சியூட்டும் தேசபக்தி பாடல்கள் வாயிலாக சுதந்திரம் வேண்டி தங்களை அர்ப்பணித்தனர்.

தியாகத்தீயில் யாகம் செய்ததன் பலனாக விடுதலை என்ற வரம் கிடைத்தது. அந்த வழியில் தான் குடியரசு உதித்தது.

இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் பட்டேல் 500க்கும் மேற்பட்ட சமஸ்தானங்களை பாரதத்திற்காக ஒருங்கிணைத்தார். ஒன்றிரண்டு முரண்டு பிடித்தனர். அவர்களை பணியவைக்க இராணுவத்தின் துணையை நாடினார். மன்னர்களுக்கு மானியம் கொடுப்பது என நிர்ணயிக்கப்பட்டது, நேருவின் ஆட்சியில்! பின்னர் அது நிராகரிக்கப்பட்டது, அவரது மகள் இந்திராவின் ஆட்சியில்!!. இப்படியாக முழுவதுமாக முடியரசு முடிவுற்றது.

முடியரசில் சிலபல நிறைகள் இருந்தது போல, குடியரசிலும் ஒருசில குறைகள் இருக்கத்தானே செய்யும். ஆங்காங்கே வாரிசுகள் கோலோச்சுகின்றனர். ஆனாலும் "நான்காம் தலைமுறையைப்பார்" என்று துவங்கும் சொலவடை மேல் நம்பிக்கை வைத்து காத்திருப்போம்.

எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்பது குடியரசின் முதல் பிரகடனம். மக்கள், மன்னர்கள் ஆகிவிட்டப்பிறகு தங்களின் பொறுப்புணர்ச்சியை புறந்தள்ளி, உரிமைகளை நிலைநாட்ட, தமது கட்டளைகளை பிறர் நிறைவேற்ற வேண்டும் என்று எத்தனிக்கின்றனர்.

ஜனநாயகத்தின் பிரதான கடமையான வாக்கு செலுத்துவதில் மிக அதிக கவனமாக இருப்பது, நாட்டின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு ஓட்டு அளிப்பது, அரசின் ஒவ்வொரு செயல்பாடுகளையும் உன்னிப்பாக உற்று நோக்குவது, தேவைப்பட்டால் சரியான வழிமுறைகளில் அரசிடம் நம் கருத்துக்களை கொண்டு செல்வது போன்ற கடமைகளை கடைப்பிடித்து பொறுப்புகளை தாமாக முன்வந்து ஏற்றுக்கொண்டு சேவகன் போல் தன்னலமற்ற சேவைகளை செய்துவிட்டு, உரிமையுடன் கட்டளை இடும் இடத்திற்கு வரலாமே! விவேகானந்தர் கூறியது போல.

இவற்றை அனைவரும் தொண்டுள்ளத்துடன் பின்பற்றினால் நம்நாடு வல்லரசு என்று சாதனை படைக்கும்.

அனைவருக்கும் பவள ஆண்டு குடியரசு தின வாழ்த்துகள்.






## தொழில் செய்யும் அனைவரும் தொடர்ந்து உற்று கவனிக்க வேண்டிய

# CASH FLOW - பணப்புழக்க அறிக்கை

- லகுடுவா பாஸ்கர்
பட்டையக் கணக்காளர்

ஒரு மனிதன் வாழ்வதற்கு மூச்சுக்காற்று எவ்வளவு முக்கியமோ, அது போல, ஒரு தொழிலை வெற்றிகரமாக நடத்துவதற்கு பணப்புழக்கம் முக்கியமானது. ஆகவே, பணம் எவ்வாறு நம் தொழிலில் நுழைகிறது மற்றும் வெளியேறுகிறது என்பதை கண்காணிப்பது அவசியமாகும். அதனை கண்டறிவதற்கு பணப்புழக்க அறிக்கை (Cash Flow Statement) நமக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

பணப்புழக்க அறிக்கையின் முக்கிய நோக்கம் ஒரு வணிகத்தின் பணத்தை உருவாக்குவதற்கும் அதன் நிதிக் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் திறனை வழங்குகிறது. கூடுதலாக, வளர்ச்சிக்கு திட்டமிடவும், பல்வேறு வணிக சூழ்நிலைகளின் கீழ் நிதி சிக்கல்களைத் தவிர்க்கவும், நீண்டகால சாத்தியமான திவால் நிலையை அடையாளம் காணவும் மற்றும் ஆரோக்கியமான / ஆரோக்கியமற்ற நிதி நிலைமைகளின் அடையாளமாகவும் இது உதவுகிறது.

பணப்புழக்கத்தை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. வணிக நடவடிக்கைகளில் இருந்து பணப்புழக்கம்
2. முதலீட்டில் இருந்து பணப்புழக்கம்
3. நிதியிலிருந்து பணப்புழக்கம்.

மேற்கூறியவற்றில், முதலாவதாக கூறப்பட்டுள்ள, வணிக நடவடிக்கைகளில் இருந்து வரும் பணப்புழக்கம் என்பது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் வணிகம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை இந்த பணப்புழக்க அறிக்கை உங்களுக்கு காண்பிக்கும்.

வணிக் நடவடிக்கைகளின் ஆரோக்கியத்தைப் புரிந்துகொள்ள, பின்வருவனவற்றைக் கருத்தில் கொண்டு பணப்புழக்கத்தைக் கணக்கிடலாம்.

அ. பொருட்களின் விற்பனை மற்றும் சேவைகளை வழங்குவதில் இருந்து வரும் பண வரவுகள்

ஆ. ராயல்டிகள், கட்டணம், கமிஷன்கள் மற்றும் பிற வருவாயில் இருந்து வரும் பண வரவுகள்

இ. பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான சப்ளையர்களுக்கு பணம் செலுத்துதல்

ஈ. ஊழியர்களுக்கு மற்றும் அவர்களின் சார்பாக பணம் செலுத்துதல்

உ. காப்பீட்டு நிறுவனத்தின் பிரீமியங்கள் மற்றும் கோரிக்கைகள், வருடாந்திரங்கள் மற்றும் பிற பாலிசி நன்மைகளுக்கான பண ரசீதுகள் மற்றும் ரொக்கப் பணம்

ஊ. நிதி மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளுடன் குறிப்பாக அடையாளம் காணப்பட்டாலன்றி, பணக் கொடுப்பனவுகள் அல்லது வருமான வரிகளைத் திரும்பப் பெறுதல்

எ. ரொக்க ரசீதுகள் மற்றும் எதிர்கால ஒப்பந்தங்கள், முன்னோக்கு ஒப்பந்தங்கள், விருப்ப ஒப்பந்தங்கள் மற்றும் பரிமாற்ற ஒப்பந்தங்கள் தொடர்பான ஒப்பந்தங்கள் கையாளும் அல்லது வர்த்தக நோக்கங்களுக்காக நடத்தப்படும் போது.

வணிக நடவடிக்கைகளில் இருந்து வரும் பணப்புழக்க அறிக்கை தயாரிக்கையில், நிகர வருமனாத்தில் இருந்து FD மீதான வட்டி, வாடகை வருமானம், நிதி நடவடிக்கைகளிலிருந்து கிடைக்கும் பணம் மற்றும் தேய்மானம், உபகரணங்களின் விற்பனையில் ஏற்படும் இழப்பு, கடனைத் திருப்பிச் செலுத்தும் செலவுகள் போன்றவைகளை கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது.

பணப்புழக்கத்தை மேம்படுத்தும் மற்றொரு முக்கியமான அம்சம், வரவு கணக்குகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம், விற்பனைத் தொகை (கடன்) நிகர வருமானத்தில் நுழைகிறது. ஆனால் அதே காலக்கட்டத்தில் பெறத்தக்க கணக்கு (Sundry Debtors) சேகரிக்கப்படாவிட்டால், பணத்தில் அதிகரிப்பு இருக்காது. எனவே, நிகர வருமானம் வசூலிக்கப்படாத கணக்கு வரவுகளின் அளவைக் குறைக்க வேண்டும். மிகவும் திறம்பட இருக்க, பெறத்தக்கவைகளின் நிலையைப் புரிந்துகொள்வதற்கு DSO எனும் தினசரி விற்பனை நிலுவையை (Daily Sales Outstandings) கணக்கடலாம். அந்தத் தேதியின்படி எத்தனை நாட்கள் விற்பனை வரவு பெறப்படவில்லை என்ற விவரங்களை உங்களுக்கு வழங்க முடியும்.

DSO-வைக் கணக்கிடுவதற்கு தினசரி சராசரி விற்பனையை நாம் பரிசீலிக்கலாம். இதை தொழில்துறை அல்லது பிரிவு அளவுகோலுடன் ஒப்பிடலாம். நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வரம்பிற்குள் இருக்கிறோமா இல்லையா என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

இதேபோல், கொள்முதல் கணக்கு ஆகும். ஆனால், அதே காலத்திற்குள் செலுத்த வேண்டிய  கணக்கு (Sundry Creditors) செலுத்தப்படாவிட்டால் பணத்தில் எந்தக் குறையும் இல்லை. எனவே, நிகர வருமானம் செலுத்தப்படாத பல்வேறு கடனாளிகளின் தொகையால் சரிசெய்யப்பட வேண்டும்.

மிகவும் திறம்பட இருக்க, ஒருவர் செலுத்த வேண்டிய தொகையின் நிலையைப் புரிந்துகொள்ள DPO எனும் தினசரி கொள்முதல் நிலுவைத் தொகையை (Daily Purchase Outstandings) கணக்கிடலாம். அந்தத் தேதியின்படி எத்தனை நாட்கள் வாங்குதல்கள் செலுத்தப்படாமல் உள்ளன என்ற விவரங்களை உங்களுக்கு வழங்க முடியும்.

DPO-வைக் கணக்கிடுவதற்கு தினசரி சராசரி வாங்குதலை நாம் பரிசீலிக்கலாம். இதை தொழில்துறை அல்லது பிரிவு அளவுகோலுடன் ஒப்பிடலாம். நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வரம்பிற்குள் இருக்கிறோமா இல்லையா என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

உண்மையில், வணிக நிறுவனம் எப்போதும் வெற்றிகரமான வணிக நடவடிக்கைகளுக்கு ஆரோக்கியமான நிதி நிலைமைகளைக் கொண்டிருக்க DSO, DPO- ஐ விட குறைவாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

எனவே, மேற்கூறியவாறு பணப்புழக்க அறிக்கை தயாரிக்கும்போது, நமது வணிகம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை புரிந்துகொண்டு அதற்கான சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.


MAHO JASE
IT Service
Comprehensive IT Partner
O.R. SURESH BABU
Co-Founder & Marketing Head
WEBSITE & SOFTWARE DEVELOPMENT
Websites | Mobile APP | E-Commerce
Starts From
₹5000/-
O.S. HIRAN RAM BABU
Co-Founder & CEO
DIGITAL
MARKETING
Call Us
• Digital Marketing
• Social Media Management
• Poster Design
• Ads on Social Media
• WhatsApp Catalogue setup
OTHER SERVICES: IT Training, Guaranteed Career Support, College Projects, Student Internship, Presentation (PPT), MSME & UDAYAM Registration, Infrastructure Management Services
MAHO JASE IT
471, West 1st Cross St., KK Nagar, Madurai- 20.
+91-6379618513 | 0452-4991171
CHENNAI | MADURAI | TRICHY
info@mjit.in
www.mjit.in

# ஆன்மிகம் - லௌகிகம்
# வெற்றியின் ரகசியம்



தனி ஒருவன் திரைப்படத்தில் ஒரு காட்சியில், அரவிந்த் சாமியிடம், உங்கள் வெற்றியின் ரகசியம் என்ன என்று கேட்பார்கள். அதற்கு அவர், "ஒரு இலக்கை தேர்வு செய்துகொள்ளுங்கள். அதையே சுற்றிவாருங்கள். வெற்றி நிச்சயம்" என்று ரத்ன சுருக்கமாக சொல்லி முடித்துவிடுவார். இது வெறும் திரைப்படம் வசனம் என்று கடந்துவிட முடியாது. உண்மையில், இது ஒரு ஆன்மிக உண்மை. பகவான் ஶ்ரீமந் நாராயணனின் அடியார்களான பனிரெண்டு ஆழ்வார்களின் வாக்கு. அவர்கள் கூறியதைத் தான் நம் சமூகத்தவர்களுக்கு புரியும் வகையில், ஸௌராஷ்ட்ர மொழியில் நமது ஸௌராஷ்ட்ர ஆழ்வார் ஶ்ரீமந் நடன கோபால நாயகி ஸ்வாமிகள் "ஹுீடினிம், பிசினிம், ஹோங்கும் ஹரி ப[4]ஜன் கரே" என்று கூறியுள்ளார். அதாவது, நாம் இந்த பிறவிச் சுழலிருந்து விடுபட, முக்தி பெற ஶ்ரீமந் நாராயணன் ஒருவனே என்று புரிந்துகொண்டு, அவனை இலக்காய் கொண்டு சர்வகாலமும் அவனையே நினைத்திருந்தால் நிச்சயம் ஒரு நாள் மோக்சம் கிட்டும் என்கிறார். இந்த சூட்சமமான தத்துவம் தான் (ஃபார்முலா) லௌகிக வாழ்க்கையில் (சிற்றின்ப வாழ்க்கை) நம் தொழிலிலோ, விளையாட்டிலோ, படிப்பிலோ, இசை என பல்வேறு துறைகளில் சாதிக்க உதவுகிறது. அவன் அத்துறையில் வெற்றியாளன் ஆகிறான். இந்த தத்துவப்படி ஆன்மிகத்தில் இருப்பவன் இறைவன் காலடியில் சேர்ந்து பிறவா நிலையை, மோக்சையை அடைகிறான்.


APPOLO SALES & SERVICE
அப்போலோ
மோட்டார் & பம்ப்ஸ்
Mfrs : SRI KARTHICK PUMPS, MADURAI - 625 009. GSTIN : 33CALPK9113M1ZE
YOUR TRUSTED BRAND IN JET PUMPS SOURASHTRIAN PRODUCT
32B, குருவிக்காரன் சாலை,
கணேஷ் தியேட்டர் பாலம் அருகில், மதுரை - 625 009.
98428 14725
பழைய மோட்டார் EXCHANGE செய்யப்படும்



கம்பரசர் மோட்டார் ரூ 12,500 முதல்



மோனோபிளாக் மோட்டார் ரூ 6500 முதல்



ஓபன்வெல் மோட்டார் ரூ 5500 முதல்



சப்மெர்சிபள் பம்ப் (காப்பர் ரோட்டர்) ரூ 7500 முதல்



Available for
**Lease Rent**

**Owner Name:**
M.K. Kaladhar Babu
Managing Director
Pandian Printpacks and Textile Mills Pvt. Ltd.,
Kappalur, Madurai - 625008

**GST No.:** 33AABCP0789M1Z4

**SIDCO Address:**
Shed No. 22A, SIDCO Industrial Estate, Kappalur, Thirumangalam Taluk, Palakkapudupatti Village, Madurai - 625008.

**Building Area:**
61.5' * 42.5' (2615 Sq.ft) with Galvanised (JSW) sheet roofed buildings

**Shed No.:** 5

**EB Power:** 104.8HP/105KW

Available for immidiate occupation.

**Contact Nos.**
99944 35350
99944 98090



நூறுண்டு கால பட்டு பாரம்பரியம்
SRB SILKS HOUSE
145,East Veli Street, Thavitusanthai, Madurai-1.
Cell : 92445 00633

SRB FINSERVE PVT.LTD.
B1, Sivagangai Road, Managiri,K.K.Nagar,Madurai.
(Opp: Aavin High Tech Parlour)
Cell : 90922 97702

SRB RETAIL LLC.
503, Gracelyn Way Lewis Center,
COLUMBUS, OHIO,43035.
Ph : +1 952 290 6405

SRB MULTI PURPOSE HALL
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar,Madurai.
Cell : 89039 29247

100 SRB

EXPRESS BRIYANI
Anna Nagar, South Marret St., Kalavasal.
Cell : 97901 59015, 72007 26300

KEESHTU BOLI & SNACKS
East Gate - Kalavasal - Navabathkana Street, Madurai.
Cell : 81243 45000

SRB CATERING
135, 2nd East Main Road, Anna Nagar, Madurai.
Cell : 89398 97500

SWASI NATURO CURE HOSPITAL
ஆயுர்வேதம் – பஞ்சகர்மா – பாதகூஸா, வர்மா மருத்துவம்
S.R.B.Complex, 392, Anna Nagar, Madurai.
Cell : 95977 48952

S.R.B.KISHORILAL ★ S.R.B.MADANLAL
S.R.B.ARUNLAL



ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
OM SHANTI
Cell: 90805 54802, 99424 90217
**Prof. Dr. M.V. SUBBURAMAN**
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga),
M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University
(Retd. HOD of Hindi, The American College, Madurai).
MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE
ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M
4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

*With best compliments from*



K.K.Dinakaran
Chairman & Director

## Kfam Group of Companies

## Pandian Surfactants Private Limited

Manufacturers Representative for

godrej — Chemical Division

IFF — Perfumes & Fragranaces

INDORAMA — Speciality Chemicals

## Kfam Micro Products Private Limited

Manufacturers of Speciality Chemicals & Consumer Products

Micro Sol — PERFECT CLEANING FOR FUTURE LIFE



## Kfam Micro Polymers

Manufacturers of Blow Moulding & Injection Moulding Products









Regd. Office : **Pandian Surfactants Private Limited**
Shed No.57/62, (NP) Sector 1, 3rd Street, Ambattur Industrial Estate,
SIDCO Industrial Estate, Pattaravakkam, CHENNAI-600 098.
Email : dinakaran@pfpl.in Kishan@pfpl.in www.pandiansurfactants.com

Branches | Chennai | Madurai | Hyderabad | Bangalore

# மனிதவள மேலாண்மை ஒரு பார்வை

பகுதி: 02

- K.S.Ashwath Babu Kuduva
HRD Consultant & Soft Skills Trainer / Contact: 98421 89551

ராம்கியும் கிருஷ்ணாவும் வெகு நாள் கழித்து சந்திக்கிறார்கள். அவர்கள் உரையாடலில் தொழில் சம்பந்தமாக பேசும்போது தொழிலாளர் சார்ந்த நிறைய பிரச்சனைகளை கிருஷ்ணா சொல்ல ராம்கி தொழிலாளர்களை தேடும் பல வழிமுறைகளை சொல்லிக் கொண்டிருக்கிறார் அப்போது சிவா அங்கு வருகிறார்.

கிருஷ்ணா: ஹாய் சிவா ப்ரோ

சிவா: ஹாய் ராம், ஹாய் கிருஷ்ணா லாங் டைம் நோ சீ. எப்படிடா இருக்க?

கிருஷ்ணா: நான் நல்லா இருக்கேன்... நீங்க ப்ரோ...

சிவா: ரொம்ப நல்லா இருக்கேன் பா. நீங்க ஏதோ தீவிர டிஸ்கஷன்ல இருக்கீங்க போல இருக்கு.

கிருஷ்ணா: ஆமா ப்ரோ. என் கம்பெனியில உள்ள தொழிலாளர் பிரச்சனைகளை பற்றி டிஸ்கஸ் பண்ணிட்டு இருந்தோம்.

சிவா: அப்படி என்ன பிரச்சனைகள்?

கிருஷ்ணா: எல்லாமே பிரச்சனைதான். ராம் ப்ரோ வந்து ஆட்களை எப்படி தேடுவது என்று சொல்லிட்டு இருந்தாரு, சரியான ஆட்களை எப்படி தேர்ந்தெடுக்கிறது அப்படின்னு சொல்றதுக்குள்ள நீங்க வந்துட்டீங்க.

சிவா: ஓகே ஓகே அது எப்படி தேடுவது என்று சொல்லுங்க ராம் ப்ரோ நானும் கேட்டுக்கொள்கிறேன்.

ராம் கி: டேய் சிவா, இதுலே எல்லாம் நீ தானே எக்ஸ்பர்ட், நீ அவனுக்கு சொல்றியா?

சிவா: சொல்றேன் அதுக்கு முதல்ல டீ சாப்பிடனும்

ராம் கி: சந்து முக்குல ஒரு டீ கடை இருக்கு அங்கே வடை சூப்பரா இருக்கும். எவ்வளவு நேரம் ஆனாலும் உட்காந்து கொள்ளலாம்.

சிவா: ஓகே...

டீக்கடையில்....

ராம்கி : நான் கிரீன் டீயும் வடையும் சாப்பிட போறேன் உங்களுக்கு?

சிவா: பிறகு ஒரு வடையும் ஒரு காப்பியும்

கிருஷ்ணா: எனக்கு காபி

ராம்கி: தம்பி ரெண்டு வடை ரெண்டு காபி ஒரு கிரீன் டீயும் கொண்டு வா. சரி இப்ப மேட்டருக்கு வாங்க.

சிவா: இப்போ நிறைய விண்ணப்பங்கள் வந்துருச்சு எப்படி தேர்ந்தெப்பது என்பது தானே கேள்வ?

கிருஷ்ணா: ஆமாம், எந்தெந்த விஷயங்களை ஒருவரிடம பாரக்க வேண்டும்.

சிவா: அது ஒவ்வொரு பதவியோ அல்லது அவர்கள் செய்யும் வேலையை பொறுத்து தேர்ந்தெடுக்கும் முறை அமையும்

கிருஷ்ணா: புரியலையே

சிவா: ஒரு தொழிலாளிக்கும் சூப்பர்வைசருக்கும் மேனேஜருக்கும் வெவ்வேறு விதமான தேர்ந்தெடுக்கும் முறையை கையாள வேண்டும்.

கிருஷ்ணா: ஒவ்வொன்றாக சொல்லுங்களேன்.

சிவா: பொதுவாக மூன்று விஷயங்களை எல்லாரிடமும் பார்க்க வேண்டும். அதாவது ஒருவருடைய அறிவு, திறமை மற்றும் மனோழலை. நாம பொதுவா ரெண்டு விஷயத்தை கரெக்டா பாத்துருவோம். அவர்களுடைய அறிவு மற்றும் திறமை, ஆனா இந்த மனோநிலையை நம்மளால சரியா கணிக்காம விட்டுரோம்.

கிருஷ்ணா: சரி ஒவ்வொன்றாக சொல்லுங்க

சிவா: அதற்கு முதலில் வேலையின் தன்மையை பகுத்தாய்வு செய்ய வேண்டும். பிறகு அதற்கு தேவையான அறிவு நிலை, திறமையின் அளவு எவ்வளவு என்று கணிக்க வேண்டும்.

கிருஷ்ணா: என்ன ப்ரோ திடீர்னு தோசையை முதல்ல இருந்து ஊத்துறீங்க?

சிவா: ஆமாம் ப்ரோ. நீங்க வீட்ல சமையல் செய்யனும் அப்படின்னு வச்சுக்கோங்க என்னென்ன விஷயம் பார்கணும்?

கிருஷ்ணா: எத்தனை பேர் இருக்காங்க எவ்வளவு சமைக்கனும் என்ன சமைக்கனும் அதுக்க தேவையான மளிகை மற்றும் காய்கறிகள் என்னென்ன என்று பார்க்க வேண்டும்.

சிவா: அப்புறம்

கிருஷ்ணா: ஒவ்வொன்னும் எவ்வளவு வாங்கனும் அப்படின்னு பார்க்கனும்.

சிவா: அவ்ளோதானா?

கிருஷ்ணா: காய்கறி மற்றும் மளிகை சாமான்கள் தரமானதா பார்த்து வாங்கனும்.

சிவா: சூப்பர் ப்ரோ. இதத்தான் மனித வள திட்டமிடுதல் அப்படின்னு சொல்லுவாங்க.

கிருஷ்ணா: எப்படி சொல்றீங்க?

சிவா: நீங்க சொல்லலாம். யோசிச்சு பாருங்க. அதை இப்ப நம்ம வந்து மனித வள திட்டமிடுதலோட ஒப்பிட போறோம்.

கிருஷ்ணா: சூப்பர்

சிவா: எத்தனை பேர் இருக்காங்க அப்படிங்கறது தான் எவ்வளவு வேலை இருக்கிறது அப்படின்னு நினைச்சுங்கோங்க. எவ்வளவு சமைக்கனும் என்கிறது எத்தனை ஆட்கள் அந்த வேலையை செய்வதற்கு வேணும் அப்படின்னு எடுத்துக்கலாம்.

கிருஷ்ணா: அப்படின்னா, என்ன சமைக்கனும் அப்படிங்கறது?

சிவா: ஏன் ப்ரோ அவசரப்படுகிறீர்கள். அத வந்து எப்படிப்பட்ட ஆட்களை தேர்ந்தெடுக்கனும் அப்படின்னு எடுத்தக்கலாம்.

கிருஷ்ணா: அப்போ எவ்வளவு வாங்க வேண்டும் அப்படிங்கறது எத்தனை ஆட்கள் வேணும் அப்படின்னு முடிவு எடுப்பது தானே?

சிவா: கரெக்ட். மிச்சத்தையும் சொல்லி முடிங்க

கிருஷ்ணா: தரமான பொருட்கள் மற்றும் காய்கறிகள் வாங்குவது தரமான ஆட்களை தேர்ந்தெடுப்பது போல. கரெக்டா?.

சிவா: சே!... பாயிண்ட்டை பிடிச்சிட்டீங்க ப்ரோ. என்ன தோசையை முதலில் இருந்து ஊத்துனது கரெக்ட் தானே?

கிருஷ்ணா: ஆமாம் ப்ரோ. எனக்கு லைட்டா தல சுத்துது. நம்ம டீ சாப்பிட்டுவிட்டு அப்புறம் பேசுவோமா?

ராம்கி: டேய் தம்பி வடையையும் காப்பியையும் சீக்கிரம் கொண்டு வாடா. சிவா, நீ மிச்சத்தை காப்பி சாப்பிட்ட பிறகு பேசலாம்.

சிவா: ராம் இரண்டு போன் பேச வேண்டி இருக்கு மிச்சத்தை புத்தகத்தோட அடுத்த எடிஷன்ல பேசிக்கலாம்.

– தொடரும்


VEDHAVALLI
HOLIDAYS
Enjoy Your
GROUP TOUR
சிங்கப்பூர் மலேசியா 6 நாள்
ஹாங்காங் மக்காவு 6 நாள்
இந்தோனேஷியா பாலி 6 நாள்
மொரிஷியஸ் 7 நாள்
துருக்கி 7 நாள்
எகிப்து 7 நாள்
பாங்காக் பட்டாயா 5 நாள்
மற்றும் பல உள்நாட்டு, வெளிநாடு சுற்றுலாக்கள்
அமெரிக்கா
ஆஸ்திரேலியா
கனடா
ஜப்பான்
தென் கொரியா
ஐக்கிய அரபு நாடுகள்
சீனா
ஐரோப்பா
சிங்கப்பூர்
TOURIST VISA ASSISTANCE
Apply & Travel Now!
82, காமராஜர் சாலை, அலங்கார் தியேட்டர் எதிர்புறம், மதுரை - 625 009.
rbs.vedhavalliholidays@gmail.com
99430 31237

# சமூகத்தின் பல்வேறு விழாக்களில்
# ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் பங்களிப்பு



ஸௌராஷ்ட்ர ஜிம் - பவள விழா
நாள்: 29.12.2024

ஸௌராஷ்ட்ர சிலம்ப & தேகப்பயிற்சி சாலை(ஜிம்)-ன் 75ம் ஆண்டு பவள விழாவில் ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் முன்னாள் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். தமிழக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. S.S. சரவணன் அவர்கள் விழா மலரை வெளியிட, முதல் பிரதியை திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் பெற்றுக்கொண்டார். இந்த நிகழ்வில் சேம்பர் முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் ஜிம் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



குஸோ - 32வது ஆண்டு விழா
நாள்: 29.12.2024

பெங்களூருவில் செயல்பட்டு வரும் சமூக அமைப்பான கர்நாடக ஸௌராஷ்ட்ர யுனைடட் அமைப்பு (குஸோ)-வின் 35ம் ஆண்டு விழா பெங்களூருவில் நடைபெற்றது. இதில் சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். 2025ம் ஆண்டு காலண்டர் வெளியீடு செய்தார். குஸோ நிர்வாகிகள் மற்றும் சேம்பர் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## ஸ்ரீமந் நடன கோபால நாயகி ஸ்வாமிகள் ஜெயந்தி விழாவில் சேம்பர் நிர்வாகிகள்

ஸ்ரீமந் நாயகி ஸ்வாமிகள் ஆன்மீக இளைஞர் எழுச்சி இயக்கம் சார்பில் நடத்தப்படும் ஸ்ரீமந் நடன கோபால நாயகி ஸ்வாமிகளின் 182வது ஜெயந்தி விழாவினை முன்னிட்டு காதக்கிணறில் நடத்தப்படும் மாபெரும் பாராட்டு விழாவிலும். தெப்பக்குளம் கீதா நடனகோபால நாயகி மந்திர் சார்பாக நடைபெற்ற 6 நாள் ஜெயந்தி விழாவிலும் சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## இரங்கல்



நமது சேம்பர்-ன் ஆயுட்கால உறுப்பினர், விஜயா ஸ்கிரீன் உரிமையாளர் திரு. **கே.டி. பாலன்** அவர்கள் 31.12.2024 அன்று காலமானார் என்ற செய்தி மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. அவரை இழந்து வாடும் அவர் குடும்ப உறுப்பினர்களுக்கு சேம்பர் ஆழ்ந்த இரங்கலை தெரிவத்துக் கொள்கிறது.










Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

**JSW COLOURON+ கூரைகள்**

**JSW Steel**

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

**Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in**

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

**Meerakunj®**

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

*Trust us with all your Electrical Plumbing and Agri needs...*





## மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

## VIGNESH GRAPHICS

*All Kinds of Printing Solution*



- Brouchers
- Wedding Cards
- Souvenirs & Directories
- Visiting Cards

**Head Office :** 79-A, South Marret Street, Madurai - 625 001.

**Branch :** No. 33, Manjanakara Street, Madurai - 625 001.

**Branch :** Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.

O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com

- Letter Pads
- Shopping Bags
- Paper Bags
- Menu Cards

**உங்கள் உடல் எடையை பராமரிக்க குறைக்க / அதிகரிக்க விரும்புகிறீர்களா?**

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

ஆலோசனை பெற அணுகவும்

**L.N.R. தாமோதரன் - 98431 71477**

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2025-2027
Printed Matter

Date of Posting : 20.01.2025 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2025 - 2027
Date of Publication 20th of Every Month

0452 231 2293 98409 60846 / 90479 50885

UG CHEMI JAGSAN
U G கெமி ஜாக்சன்



(Innovators in Construction Admixtures &
Promoters of Geo Polymer Concrete - Concrete without Cement)
5A, New No : 17, Room No : 3, Pankajam Colony 4th Cross Street Madurai:625 009
E mail : info@ugchemijagsan.com / Web : www.ugchemijagsan.com



வேல் மருத்துவமனை
வேல் சிறப்பு எலும்பியல் மையம்
Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement
VALE HOSPITAL
45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597
Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com
Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.
24hrs Service





சிறப்பம்சங்கள்
- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்
- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

Right Treatment is Everyone's Right




Official Publication:
SOURASHTRA CHAMBER OF COMMERCE
136, East Veli Street, II Floor, Madurai - 625009
Call: 0452 2629955 / 93441 97952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.com